# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.74/2020.

Prosecution witness for P.W.3.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. முத்துக்குமார். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.06.2025.

Accused are present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது வள்ளியம்மாள்புரத்தில் குடியிருந்து ஆட்டோ ஓட்டுநராக தொழில் செய்து வருகிறேன். இறந்துபோன வில்வின் ரஜுஷ் என்பவரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 27.01.2019 அன்று இரவு சுமார் 10.30 மணியளவில் மேற்படி வில்வின் ரஜுஷ் என்னை கைபேசி மூலம் அழைத்து ஆட்டோவில் தெற்கு மாநாடு பேருந்து நிறுத்தத்தில் இறக்கிவிடச் சொன்னதாகவும், அந்த பேருந்து நிறுத்தத்தில் எதிரிகள் இருவரும் நின்று கொண்டிருந்ததாகவும், பின்னர் நான் அந்த இடத்தைவிட்டு சென்ற பிறகு பின்னர் 11.30 மணியளவில் எதிரிகள் இருவரும் வில்வின் ரஜுஷை இரும்பு கம்பியால் என் மனைவியிடம் எதற்கு பேசுகிறாய் என்று மாறி மாறி தாக்கியதில் அவருக்கு உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்டு சாலையோரம் கிடந்தததாகவும், பின்னர்

28.01.2019 அன்று 11.15 மணியளவில் திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து மேற்படி வில்வின் ரஜுவ்ஷ் இறந்துவிட்டதாக நான் கேள்விப்பட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.06.03 18:36:16 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.74/2020.
Prosecution witness for P.W.4.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ஆத்திமுத்து. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.06.2025.

Accused are present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மாநாட்டில் குடியிருந்து சரக்கு வாகன ஓட்டுநராக தொழில் செய்து வருகிறேன். இறந்துபோன வில்வின் ரஜிஷ் எங்கள் ஊரில் வாடகைக்கு குடியிருந்தார். 1ம் எதிரியை தெரியும். 2ம் எதிரியை தெரியாது. வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 27.01.2019 அன்று நானும், சாட்சி சுந்தர்ராஜ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர்கள் எங்கள் ஊர் பிரதான சாலையில் இரவு சுமார் 11.30 மணியளவில் நின்று கொண்டிருந்தபோது எதிரிகள் இருவரும் மோட்டார் சைக்கிளில் வந்து மேற்படி வில்வின் ரஜிஷை இரும்பு கம்பியால் தாக்கி என் மனைவியிடம் ஏன் பேசுகிறாய் என்று சொல்லி தாக்கி கொண்டிருந்ததாகவும், அதைப் பார்த்த நாங்கள் சத்தம் போட்டுக் கொண்டு ஓடி வந்தபோது எதிரிகள் இருவரும் மேற்கு நோக்கி ஓடிவிட்டதாகவும், எதிரிகளின் உறவினர்களான அ.சா.1, அ.சா.2 அருகில் சத்தம்போட்டுக் கொண்டு வந்ததாகவும், அதை

பார்த்தவுடன் எதிரிகள் இருவரும் மோட்டார் சைக்கிளில் மேற்கு நோக்கி சென்றுவிட்டதாகவும், சாலையோரம் மயங்கி கிடந்த வில்வின் ரஜிஷை 108 ஆம்புலன்ஸ் மூலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் 28.01.2019 அன்று 11.15 மணியளவில் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அவர் இறந்துவிட்டதாக நான் தெரிந்து கொண்டதாக சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரிகளுக்கு பயந்து கொண்டு பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.06.03 18:36:23 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.